பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 25 செவ்வாய்க்கிழமை 08.02.2022 கதிர் 321

## 50 எம்.பிக்களுக்கு கொரோனா உறுதி

### டிலானும் பாதிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவுக்கு இன்று கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. ☞2

# வடக்கு - கிழக்கு 'தமிழர் தாயகம்' என்பதை உறுதிசெய்து இலங்கைக்கு உதவிடுங்கள்

### இந்தியாவிடம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை




இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதை உறுதிசெய்தே, இலங்கைக்கான உதவிகளை இந்தியா வழங்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் தமிழ்நாடு தோழமை மையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் -

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வமாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளார்.

இலங்கை மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் நிலையில், ☞2

# ஹிட்லரைப் போன்று கோட்டா இங்கு ஆட்சி

### சபையில் சாணக்கியன் சீற்றம்



**இலங்கையில் ஹிட்லரைப் போன்றுதான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி நடத்தி வருகின்றார். ஹிட்லர் தனது கடைசிக் காலத்தில் ஜேர்மனியர்கள் எத்தனை பேர் இறந்தாலும் பறவாயில்லை என்று தனது கொள்கையைச் செயற்படுத்தி வந்தார். அதேபோன்றுதான் ஜனாதிபதி கோட்டாபயவும் செயற்பட்டு வருகின்றார்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.** ☞2

## 'கோப்' குழுவில் அநுரகுமார

### புதிய உறுப்பினர்கள் விவரம் அறிவிப்பு

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவுக்கான (கோப் குழு) உறுப்பினர்கள் இன்று பெயரிடப்பட்டனர்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதி சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போதே பிரதி சபாநாயகர் ரஞ்சித் சிலம்பலாப்பிட்டிய மேற்படி தகவலை வெளியிட்டார். கோப்குழு உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

மஹிந்த அமரவீர, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்தன, சரத் வீரசேகர, ☞2

## காங்கேசன்துறையில் 5 இந்தியப் படகுகளும் 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலம்



(ந.லோகதயாளன்)

யாழ்., காங்கேசன்துறையில் இருந்த 5 இந்தியப் படகுகளும் இன்று 4 லட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன் பிடித்த வேளை கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களின் ட்ரோலர் படகுகள் நேற்று முதல் ஏலத்தில் விடப்படுகின்றன. இதற்கமைய இன்று ☞2

## ஆரியகுளத்தில் விபத்து; அல்வாய் இளைஞர் பலி!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., ஆரியகுளம் பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். ☞2

## இவ்வருடத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல்

### ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

இவ்வாண்டு இறுதிக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் - ☞2

## போதை மாத்திரைகளுடன் யாழில் ஒருவர் சிக்கினார்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., சுன்னாகம் - மயிலினி காட்டுப்பகுதியில் போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 11 இந்திய மீனவர்களும் மறியலில்



(ந.லோகதயாளன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 11 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவிட்டார்.

இன்று அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 3 இந்திய இழுவைப்படகுகள் ☞2



## ஹிட்லரைப் போன்று .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்ப தென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிடமிருந்து இலங்கை அரசு கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட் டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரை யாற்றியபோதே சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தவை வருமாறு -

இன்று நாட்டில் சுகாதாரப் பணியா ளர்களின் வேலை நிறுத்தம் நடைபெறும் அதேநேரம், பொது வைத்தியசாலை களில் மருந்துத் தட்டுப்பாடும் ஏற்பட்டுள் ளது.

நான் கொரோனாவால் பாதிக்கப்பட்டு தனிமையில் இருந்தபோது முகநூல் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் சில காணொளிகளைப் பார்த்தேன்.

இதில் ஒன்றில், ஹிட்லரைப் போன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி செய்ய வேண்டும் என்று கூட ஒருசிலர் கூறியிருந்தனர். உண்மையில், இன்று ஹிட்லரைப் போன்றுதான் ஜனாதிபதி ஆட்சி நடத்தி வருகின்றார். ஹிட்லர் தனது கடைசிக் காலத்தில் ஜேர்மனியர் கள் எத்தனை பேர் இறந்தாலும் பரவா யில்லை என்று தனது கொள்கையைச் செயற்படுத்தி வந்தார். அதேபோன்று தான் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வும் செயற்பட்டு வருகிறார்.

ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்கள் ஒவ்வொருவராக வழக்குகளில் இருந்து விடுதலை செய்யப்படுகின்றார்கள். இன்று நாட்டில் நீதிக்கு என்ன நடந்தது எனும் கேள்வி எழுந்துள்ளது.

நாட்டில் இன்று பொருளாதார யுத்தம் ஒன்று இடம்பெற்று வருகின்றது. இதில் ஜனாதிபதி உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொது ஜனமுன்னணியினர் தோல்வியடைந்து வருகின்றார்கள்.

எனவே, இனியும் மக்களைத் துன்பத் துக்கு உள்ளாக்க வேண்டாம் என அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கொரோனாவால் பல உயிர்களை நாம் இழந்துவிட்டோம். இந்தநிலையில், உணவின்றியும் மக்களின் உயிர்களைப் பறிக்கவேண்டாம் என நாம் இவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டின் பொருளாதாரத்தை முதலில் உயர்த்த நடவடிக்கை எடுக்கவும். பொரு ளாதாரத்தை முன்னேற்ற முடியாத தரப் பிடம் இந்த நாடு இன்று சிக்குண்டுள்ளது.

மலையக மக்களுக்கு குறைந்த விலையில் கோதுமை மாவைப் பெற்றுக் கொடுப்பதாக அரசு கூறியது. ஆனால், அவர்களுக்கு கோதுமை மா கிடைக்க வில்லை எனச் செய்திகளின் ஊடாக நாம் அவதானித்தோம். இவைதான் நாட்டில் நடக்கின்றன.

அத்தோடு, கறுப்புப் பணத்தைக் கொண்டு வடகொரியாவிடமிருந்து ஆயுதம் வாங்கியதாக நிதி அமைச்சர் கூறியுள்ளார். இது சரியாயின் இந்த விவ காரம் தொடர்பாக உடனடியாக விசார ணையை ஆரம்பிக்க வேண்டும்.

வடகொரியா என்பது பொருளாதாரத் தடைக்குட்பட்ட நாடாகும். இந்த நாட்டிலி ருந்து எவ்வாறு கறுப்புப் பணத்தைக் கொடுத்து ஆயுதம் வாங்க முடியும்?

விவசாய அமைச்சரோ பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்க 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். இது யாருடைய பணம்?

விவசாயிகளுக்கு உரத்தை வழங்கி யிருந்தால் அவர்கள் சீராக அவர்களின் வாழ்க்கையைக் கொண்டு சென்றிருப் பார்கள். அதைவிடுத்து மக்களின் வரிப் பணத்தைக் கொண்டு இவ்வாறு செய் வது சரியா? இது தொடர்பாக அரசு சிந் திக்க வேண்டும்.

வடக்கில் இன்று மீனவர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இந்திய மீன வர்களின் அத்துமீறலுக்கு எதிராக அங்கு போராட்டங்கள் மேற்கொள்ளப்படுகின் றன.

அண்மையில் இந்திய மீனவர்களின் படகு மோதுண்டு இலங்கையைச் சேர்ந்த 2 மீனவர்கள் உயிரிழந்தார்கள். ஆனால், கடற்றொழில் அமைச்சருக்கு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண முடியாமல் உள்ளது. யாழில் கடலில் இருந்து கண் பார்வைக்கு எட்டிய தூரத்தில் இந்திய மீனவர்கள் மீன்பிடித் தும் அவர்களைக் கைதுசெய்ய முடியா துள்ளது.

மேலும், ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடக்கும் நிலையில், நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குப்பி விளக்குளை வைத்தே மாணவர்கள் பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதிலிருந்தே இந்த அரசு தோல் வியடைந்துவிட்டது என்பது உறுதியாகி விட்டது. சுதந்திரத் தினத்தன்று, பல லட் சம் ரூபாவைச் செலவழித்து அணிவகுப் புக்களை அரசு நடத்தியது. இது தேவை யற்ற ஒன்றாகும்.

இந்தப் பணத்தை ஓய்வூதியம் பெறு வோருக்குப் பகிர்ந்தளித்திருக்கலாம். மக் களின் வரிப்பணத்தால் இவ்வாறு ஆடம் பரமான செயற்பாடுகள் மேற்கொள்வதை நிறுத்தியிருக்கலாம்.

அதேபோல், மாவட்ட அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்களாக 25 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக் கென தனியான வாகனங்கள், வாகனங் களுக்கான எரிபொருள் என அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவர்களோ தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு மட்டுமே அபி விருத்திசார் விடயங்களைக் கொடுக்கி றார்கள். விசேடமாக மட்டக்களப்பு மாவட் டத்தில் இவ்வாறுதான் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. தங்களுக்கு நெருக் கமானவர்களை மகிழ்விக்கவே மாவட்ட அபிவிருத்திக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட் டுள்ளன.

இதுதான் இன்று நாட்டின் நிலைமை. அத்தோடு, நாம் சர்வதேசத்துடன் ஒன் றித்துப் பயணித்தால் மட்டுமே முன்னேற் றகரமான நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

சர்வதேசத்துடன் எவ்வாறு கதைப்ப தென்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்.

நீதி அமைச்சர் அலி சப்ரி யாழ்ப்பா ணத்துக்கு விஜயம் செய்வதன் மூலம் சர்வதேசத்துடன் ஒன்றித்துச் செயற்பட முடியாது. இதன் ஊடாக ஐ.நாவுக்குப் பதில் வழங்க முடியாது.

யாழ்ப்பாணத்துக்குச் சென்று காணா மல் ஆக்கப்பட்டோருக்கு நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று நீதி அமைச்சர் கூறியுள்ளார். 2009 இல் இருந்து தாய்மார் போராடுவது இந்த ஒரு லட்சம் ரூபாவுக்காக அல்ல என்பதை அரச தரப்பினர் புரிந்துகொள்ள வேண் டும்.

காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்று தான் அவர்கள் கோருகின்றார்கள். இது அவர்களின் உரிமையாகும்.

இதற்குப் பதில் வழங்காமல், யாழ்ப்பா ணத்துக்குச் சென்று ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்துவதால் சர்வதேச பிரச்சினைகளுக்குத் தீர்வொன்று கிடைத்துவிடாது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கு வதாயின் சரியான முறையில் அதனைக் கையாள வேண்டும். அதேநேரம், பயங் கரவாதத் தடுப்புச் சட்டத்தில் கைதுசெய்யப் பட்ட எத்தனை தமிழ் - முஸ்லிம் இளை ஞர்கள் இன்னமும் சிறையில் வாடுகிறார் கள்?

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை விடுவித்த மையால் சர்வதேசத்தை ஏமாற்றிவிட லாம் என நினைக்கக்கூடாது. ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்பவர் தனி ஒரு நபர். அவருக்காகப் பல சட்டத்தரணிகள் வாதா டினார்கள். இன்று அவர் விடுவிக்கப்பட் டுள்ளார். இதையிட்டு நாம் மகிழ்ச்சிய டைகின்றோம்.

ஆனால், ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வைப் போன்று எத்தனையோ பேர், இன் னமும் சிறைகளில் வாடிக் கொண்டிருக் கின்றார்கள். அவர்களின் பெயர்கள் வெளி யுலகத்துக்குத் தெரியாது.

இந்தநிலையில், இலங்கைத் தமிழர சுக் கட்சி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத் துக்கு எதிராகக் கையெழுத்துப் போராட் டமொன்றையும் ஆரம்பித்துள்ளது.

இந்தச் சட்டமானது எதிர்காலத்தில் நிச்சயமாக சிங்கள மக்களையும் பாதிக் கும். இதனை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இன்னும் 6 மாதங்களில் நாட்டில் பஞ்சம் ஏற்படும். இதற்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமை வரும்போது அரசு அவர்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நிச்சய மாகப் பிரயோகிக்கும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக சட்டத்தரணி அம்பிகா சற்குண ராஜா கடிதமொன்றை எழுதியவுடன், வெளிவிவகார அமைச்சு அதற்கு எதி ரான அறிக்கையொன்றை முன்வைத் துள்ளது.

முதலில் இந்த விமர்சனத்தை நேர் மறையாகக் கையாள வேண்டும். இவ் வாறு செயற்படுவதன் ஊடாக மட்டுமே சர்வதேசத்துடன் நட்புறவுடன் நாம் பய ணிக்க முடியும்.

அரசு சரியான பாதையில் பயணித் தால் நாமும் அதற்கு ஒத்துழைக்கத் தயா ராகவே இருக்கின்றோம்.

தொல்லியல் இடங்கள் எனும் போர் வையில் எமது காணிகள் அபகரிக்கப்படு கின்றன. நாம் காலம் காலமாக வழிபட்டு வந்த குருந்தூர்மலை அபகரிக்கப்பட்டுள் ளது. இவற்றுக்கு எதிராகத்தான் நாம் குரல் கொடுக்கின்றோம்.

நாம் அரசிடம் கோருவது மிகவும் நியாயமான கோரிக்கைகளாகும். நாம் எந்தக் காரணம் கொண்டும் இன்னொரு நாட்டைக் கோரவில்லை. இலங்கை யைப் பிரித்துத் தர வேண்டும் என்று கோரவில்லை.

மாறாக பிரிக்கப்படாத ஒரு நாட்டுக்குள் எமது அடிப்படை உரிமைகளையே நாம் கோருகின்றோம். இதனை அரசு முதலில் புரிந்துகொள்ள வேண்டும் – என்றார்.

இதேவேளை, இரா. சாணக்கியன் எம்.பி. உரையாற்றிக்கொண்டிருந்த சந் தர்ப்பத்தில் ஆளும் தரப்பிலிருந்த சில உறுப்பினர்கள் புலி, புலி எனக் கோஷ மிட்டனர்.

இதற்குப் பதில் வழங்கிய சாணக்கி யன் எம்.பி., என்னைப் புலி எனக் கூறு வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனக் குறிப்பிட்டார்.

## காங்கேசன்துறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் தரித்து வைக்கப்பட்டிருந்த 5 படகுகள் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதி காரிகளால் ஏலத்தில் விடப்பட்டன. இதன் போதே இந்த 5 படகுகளும் 4 லட்சத்து 31ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இதேவேளை, நாளை கிளிநொச்சி மாவட்டம், கிராஞ்சியில் தரித்து வைக்கப் பட்டுள்ள இந்தியப் படகுகள் ஏலத்தில் விடப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

## 'கோப்' குழுவில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயந்த சமரவீர, இரா.சாணக்கியன், இந் திக்க அநுருத்த, நாலக கொடஹேவா, ரவூப் ஹக்கீம், சுசில் பிரேமஜயந்த, அநுரகுமார திஸாநாயக்க, பாட்டலி சம் பிக்க ரவணக்க, ஜகத் புஷ்பகுமார, ஹர்ஷ டி சில்வா, எரான் விக்கிரமரத்ன, நளின் பண்டார, மரிக்கார், தொலவத்த, மதுர விதாகக, சாகர காரியவசம், சரித ஹேரத்.

கோப் குழுவின் முதலாவது கூட்டத் தின்போது புதிய தலைவர் நியமிக்கப்பட வுள்ளார்.

## ஆரியகுளத்தில் விபத்து; ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்வாய் தெற்கைச் சேர்ந்த இந்திர சிங்கம் நிருபன் (வயது - 32) என்ற இளைஞரே இந்த விபத்தின்போது உயி ரிழந்துள்ளார்.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மினி பஸ் மீது மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அரச நிறுவ னம் ஒன்று பணிபுரிந்து வரும் குறித்த இளைஞர் தனது பணி நிமித்தம் இன்று அதிகாலை சென்ற வேளை குறித்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் யாழ்ப் பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இவ்வருடத்துக்குள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் நடத்தப்பட்டால் அது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றியே மேற் கொள்ளப்படும்.

தேர்தல் நடத்துவது குறித்து உத்தி யோகத்தர்களைப் பயிற்றுவித்தல், வாக் குச் சாவடிகள் நிறுவுதல் தொடர்பான ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் காலத்தில் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்க ளுக்குத் தெளிவூட்டல் செய்யும் நடவடிக் கையும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது - என்றார்.

## போதை மாத்திரை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஏழாலை தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிவான் நீதிமன் றத்தில் முற்படுத்த சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நெடுந்தீவுக் கடற்பரப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் மீட்கப்பட்டன. அதில் இருந்த 11 பேர் கைதுசெய்யப்பட்டு மயி லிட்டித் துறைமுகப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு இன்று காலை யாழ். மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களை நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் இன்று மதியம் ஊர்காவற் றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத் தினர். இதனைத் தொடர்ந்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி வான் உத்தரவிட்டார்.

## வடக்கு - கிழக்கு 'தமிழர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் உதவிகளை உறுதிப்படுத்த வும், இந்தியாவின் பொருளாதார முத லீட்டு முயற்சிகள், மீனவர்கள் விவகாரம், இலங்கையின் எரிசக்திப் பாதுகாப்பை மேம் படுத்தல் உட்பட பல விடயங்கள் பேசப்பட இருக்கின்றன என இலங்கை செய்திகள் தெரிவிக்கின்றன.

பொருளதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி, மருந்து வத் தேவைகள் உட்பட மக்களின் அத்தி யாவசிய தேவைகளுக்கான இந்தியா வின் உதவிகள் இந்திய தேசத்தின் மனி தாபிமானத்தை வெளிப்படுத்தி நிற்கின் றன.

குறிப்பாக இந்திய -இலங்கை ஒப் பந்தத்தின் 1.4ஆம் சரத்தில் உறுதி செய்யப்பட்ட இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம் பகுதியில், இடம் பெற்று வரும் நில அபகரிப்பு மற்றும் சிங் களக் குடியேற்றங்கள், ஒப்பந்தத்தின் அச் சரத்தை அழித்து வருகின்றன என அமைகின்றது.

இந்நிலையில், இலங்கைக்கான இந் தியாவின் உதவி வழங்கல் என்பது இந் திய - இலங்கை ஒப்பந்தத்தின் 1.4ஆம் சரத்தை உறுதி செய்தே வழங்கப்பட வேண்டும் எனக் கோருகின்றோம் - என்றுள்ளது.

## 50 எம்.பிக்களுக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, கொரோனாத் தொற் றுக்குள்ளான 50 ஆவது நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி யின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா மற் றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் லலித் எல்லா வல ஆகியோருக்கு நேற்றுமுன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு
தொலைபேசி இலக்கம்—
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எரிபொருள் தந்திரோபாயம்

**இலங்கையில் எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் தற்போது இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு (ஐ.ஒ.ஸி) இருப்பதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கத் தலைவர் ஆனந்த பாலித தெரிவித்திருக்கின்றார்.**

**அந்நிய செலவாணிக் கையிருப்புக் கரைந்ததால் எரிபொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய முடியாது அல்லாடுகின்றது இலங்கை அரசு. அதனால் எரிபொருள் பற்றாக்குறை – தட்டுப்பாடு – ஏற்படும் பெரும் இக்கட்டு.**

**இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இந்தியாவிடம் இரக்கும் நிலையில்தான் கொழும்பு ஆட்சிப் பீடம் உள்ளது. ஏற்கனவே ஐ.ஒ.ஸிக்கு இலங்கையில் இடம்கொடுத்தமை மூலம் இந்திய எண்ணெய் நிறுவனம் இலங்கையின் எரிபொருள் விற்பனைச் சந்தையில் வலுவாகக் காலூன்றி விட்டது.**

**இந்த நேரத்தில் எரிபொருளுக்கு நாடு இந்தியாவிடம் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் போது இந்தியத் தரப்பு எரிபொருள் வர்த்தகத்தில் தனது கையை – பிடியை – வலுப்படுத்தியே தீரும். அது வர்த்தக முறைமையின் தவிர்க்க முடியாத ஒரு நியதிதான்.**

**எரிபொருள் வர்த்தகத்தில் இந்தியாவைக் காலூன்ற விட்டு விட்டு அந்நாட்டிடம் போய் அதே பொருளுக்காக நாம் இரந்தால் இப்படித்தானாகும்.**

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது முகவர்கள் ஊடாக ஒரு விலையில் எரிபொருளை விற்பனை செய்ய, இந்திய ஐ.ஒ.ஸி. நிறுவனம் சில தினங்களுக்கு முன்னர் தன்பாட்டில் தான் மட்டும் எரிபொருளின் விலையைக் கணிசமாகக் கூட்டியிருக்கின்றது.**

**இது ஏற்கனவே எரிபொருள் கையிருப்பின்றி அல்லாடும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை அடித்து விழுத்தித் தன் வழிக்கு வரப் பண்ணும் ஐ.ஒ.ஸியின் திட்டம் என்று சில தரப்புக்கள் சுட்டுகின்றன.**

**நாட்டில் உள்ள ஐ.ஒ.ஸி. பெற்றோல் நிரப்பு நிலையங்கள் எரிபொருளின் விலையைத் தன்பாட்டில் அதிகரித்தமையால் வாடிக்கையாளர்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்காக மாற்று வழியாக நாட்டில் உள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 'சிப்பெட்கோ' எரிபொருள் நிரப்பு நிலையங்களை நாடுவர். ஒரேயடியாக முண்டியடிப்பர். ஏற்கனவே எரிபொருள் பற்றாக்குறையில் தடுமாறும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் அந்தத் தேவையை தனித்து நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்படும். கைவிரிக்கும் சூழல் உருவாகும்.**

**அதனால் எரிபொருள் விநியோகத்துக்கு வேறு வழியின்றி விரைந்து இந்தியாவின் தயவில் தங்க வேண்டிய நிலைமை கொழும்புக்கு ஏற்படும் என்று சுட்டப்படுகின்றது. அந்தத் தந்திரோபாயத்தில்தான் இந்த விலை அதிகரிப்பை சடுதியாக தன்பாட்டில் ஐ.ஒ.ஸி. நிறுவனம் செய்திருக்கின்றது என விடயமறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிடுகின்றன.**

**அது சரியாகவும் இருக்கலாம். பிழையாகவும் இருக்கலாம்.**

**எது, எப்படி என்றாலும், நாட்டின் பொருளாதார முறைமை சரியான வழியில் நெறிமுறைப்படுத்த முடியாத இந்த அரசு அதன் காரணமாகப் பல விடயங்களிலும் வெளி சக்திகளின் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறும் அவல நிலைக்கு வந்துள்ளது.**

**அந்த வகையில் சீனா போன்ற ஆபத்தான தரப்புகளின் திட்டங்களுக்கு ஆடும் கயிற்றுப் பொம்மலாட்டப் பொம்மையாக இலங்கை மாறாமல், அயல் தேசமான இந்தியாவின் அழுத்தத்துக்கு உட்பட்ட தரப்பாக முன் நகர்வது எவ்வளவோ மேல்.**

## கவனவீனமாக நடந்துகொள்ளும் சுற்றுலாப் பயணிகளால் மக்கள் அச்சம்!

நுவரெலியாவில் வார விடுமுறை நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால் கொரோனா தொற்று அதிகரித்துவிடுமோ என்ற அச்சத்தில் நுவரெலியா வாழ் மக்கள் உள்ளனர்.

நுவரெலியாவில் வார இறுதியில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஏனைய விடுமுறை நாள்களிலும் வெளிமாவட்டங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருகின்றார்கள்.

இவ்வாறு நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா தொற்று தடுப்பு பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடமுறைகளைப் பின்பற்றுவதில்லை. முகக் கவசங்களை அணியாமலும் இடைவெளிகளைப் பின்பற்றாமலும் அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றனர். இதனை எவரும் கண்டுக்கொள்வதில்லை. இதனால் இங்குள்ள மக்கள் கொரோனாத் தொற்று அதிகரித்து விடுமோ என்ற அச்சத்தில் இருக்கின்றனர்.

விடுமுறை நாள்களில் விக்டோரியா பூங்காவிலும் கிறகறி பூங்காவிலும் கிறகறி வாவி கரையிலும் சுற்றுலாப் பயணிகள் கூட்ட கூட்டமாக குவிந்திருகின்றார்கள். அத்தோடு நுவரெலியா வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ள காணிவேல் களியாட்ட நிகழ்வுகளிலும் பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் குவிந்து காணப்படுகின்றார்கள்.

இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் விடுமுறை நாளகளில் நுவரெலியாவிற்கு வருகைதருவதால்வாகனதரிப்பிடங்களிலும் பிரதான பாதைகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

இதேவேளை நாடு முடக்கப்பட்டிருந்த வேளையில் கொரோனாத் தொற்றாளர்கள் குறைவாகவே அடையாளம் காணப்பட்டனர். ஆனால் தற்பொழுது தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். தற்பொழுதும் 25 தொற்றாளர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதிகமானவர்கள் தொற்று தடுப்பு வழிமுறைகளை பின்பற்றாததால் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர் என நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் மகேந்திர செனவிரத்ன தெரி வித்தார்.

நுவரெலியா மாநகர பொது சுகாதார அதிகாரி டீ. எம். எஸ். பீ. தெல்பிடிய தெரிவிக்கையில் சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பதால் தொற்றாளர்கள் அதிகரிக்கவில்லை.

இலங் கையில் ஏனைய பிரதேசங்களில் தொற்றாளர்கள் அதிகரிப்பது போலவே நுவரெலியாவிலும் தொற்றாளர்கள் அதிகரிக்கின்றனர்.

## போத்தல் தண்ணீருக்கும் புதிய விலைகள் அறிவிப்பு

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான புதிய விலைகள், இலங்கை போத்தல் குடிநீர் சங்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளன.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீருக்கான கட்டுப்பாட்டு விலைகளை நீக்கி அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இந்தநிலையிலேயே, புதிய விலைகளை போத்தல் குடிநீர் சங்கம் நேற்று (திங்கட்கிழமை) அறிவித்துள்ளது. அதற்கமைய போத்தல் குடிநீர் 500 மில்லி லீற்றருக்கான விலை 50 ரூபாவாகவும் ஒரு லீற்றருக்கான விலை 70 ரூபாயாகவும் 1.5 லீற்றருக்கான விலை 90 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல, 5 லீற்றருக்கான விலை 200 ரூபாவாகவும் 7 லீற்றருக்கான விலை 240 ரூபாவாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உயர்தரப் பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்தால் கல்விக்கு வாழ்நாள் தடை!

கொவிட்- 19 தொற்றால் பிற்போடப்பட்ட கல்வி பொதுத்தராதர உயர் தரப்பரீட்சைகள் நேற்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ளன.

கல்வி பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை, நேற்று முதல், எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரையில் 2 ஆயிரத்து 437 பரீட்சை மையங்களில் இடம்பெறுகின்றது.

இந்த பரீட்சைக்கு 3 லட்சத்து 45 ஆயிரத்து 242 பரீட்சார்த்திகள் தோற்றுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களில், 2 லட்சத்து 79 ஆயிரத்து 141 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 66 ஆயிரத்து 101 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர். பரீட்சை விதிமுறைகளை மீறும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஆள் மாறாட்டம் உள்ளிட்ட பரீட்சை விதிமுறைகளை மீறி செயற்படும் பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை எழுதுவதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும் என பாடசாலை பரீட்சைகள் ஒழுங்கமைப்பு கிளையின், பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எம். ஜீவராணி புனிதா தெரிவித்தார்.

அதேநேரம், பரீட்சை வினாத்தாள்களை சமூக வலைத்தளங்களில் வெளியிடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நகை மற்றும் தொலைபேசிகள் என்பன நபர் ஒருவரைக் கடத்திக் கொள்ளை

### பருத்தித்துறையில் சம்பவம்

*யாழ்ப்பாணம் - பருத்தித்துறையில் நபரொருவரைக் கடத்திச் சென்று பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் உள்ளிட்டவற்றைக் கொள்ளையிட்ட சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.*

*கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் நபரொருவரை முச்சக்கரவண்டியில் கடத்திச் சென்று அவரிடமிருந்து 2 லட்சம் ரூபாய் பெறுமதியுடைய தங்க ஆபரணங்கள் , 94 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய இரு கையடக்க தொலைபேசிகள் என்பவை கொள்ளையிடப்பட்டுள்ளன எனப் பருதித்துறை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.*

*அதற்கமைய கடத்தலுடன் தொடர்புடைய சந்தேகநபர் அன்றைய தினமே இரவு வேளையில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 46 வயதுடைய பருத்தித்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். கொள்ளையிடப்பட்ட பொருளகளை மீட்பதோடு , இதனுடன் தொடர்புடைய ஏனைய சந்தேநபர்களையும் கைது செய்வதற்கான நட வடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.*

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு






# கண்ணிவெடித் தாக்குதலில் சோமாலியாவில் 10 பேர் பலி

சோமாலியாவில் கண்ணிவெடி தாக்குதலில் மினி வானில் பயணித்த 10 பேர் உயிரிழந்தனர்.

சோமாலியாவின் தெற்கு பகுதியில் உள்ள துறைமுக நகரமான கிஸ்மாயோ நகருக்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு மினி வான் சென்றுகொண்டிருந்தது. அப்போது சாலையில் கிளர்ச்சியாளர்களால் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியில் சிக்கியது. கண்ணிவெடி வெடித்ததால் வேன் முற்றிலும் சிதைந்தது.

இதில், வானில் இருந்த 5 பெண்கள், 4 குழந்தைகள் உள்பட 10 பேர் பலியாகினர். 3 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலை அல்-பாப் கிளர்ச்சியாளர்கள் நிகழ்த்தியிருக்கலாம் எனத் தெரிகிறது.

கண்ணிவெடி வெடித்த சமயத்தில், அரசுப் படைகள் அல்-பாப் போராளிகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. கிஸ்மாயோவின் வடக்குப் பகுதியில் நடந்த தேடுதல் வேட்டையின்போது இந்த சண்டை ஏற்பட்டது. இதில், பாதுகாப்பு படை தரப்பில் இரண்டு வீரர்கள் காயம் அடைந்தனர் எனவும், பல போராளிகள் இறந்தனர் எனவும் ராணுவ கமாண்டர் கூறி உள்ளார்.

# இணையம் மூலம் பணம் திருடியது வடகொரியா

## ஐ.நா. நிபுணர்கள் குழு அறிக்கை!



இணையதளம் மூலம் ஊடுருவி ஏராளமான தொகையை வடகொரியா திருடியுள்ளது என ஐ.நா. பாதுகாப்பு சபையிடம், ஐ.நா. நிபுணர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது


மேலும், இணையவழியில் முறைகேடாக கிரிப்டோகரன்சிகளைப் (எண்ணிம நாணயங்கள்) பெறுவது அந்த நாட்டு அரசாங்கத்தின் முக்கிய வருவாயாக இருந்து வருகிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. நிபுணர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுவை வருமாறு - 'ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றியுள்ள தீர்மானங்களுக்கு எதிராக, தங்களது அணு ஆயுதங்களையும் அந்த ஆயுதங்களை ஏந்தி முக்கிய பகுதிகளில் தாக்குதல் நடத்த வல்ல ஏவுகணைகளையும் மேம்படுத்தும் திட்டத்தை வட கொரியா முன்னெடுத்துச் செல்கிறது. அணு ஆயதங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள் உள்ளிட்டவற்றை தயாரிப்பதற்கான நடவடிக்கையில் அந்த நாடு இறங்கியுள்ளது.

ஒலியைப் போல் 5 மடங்கு வேகத்தில் செலுத்தக் கூடிய ஏவுகணை, வளிமண்டலத்துக்கு அப்பால் சென்று, பிறகு மீண்டும் வளிமண்டலத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தக் கூடிய ஏவுகணை போன்றவற்றின் தொழில்நுட்பங்களை வட கொரியா சோதித்துப் பார்த்துள்ளது.

இதுமட்டுமன்றி, அணு ஆயுதங்களை மிகத் துரிதமாக வேறொரு இடத்துக்கு எடுத்துச் செல்லும் திறன், கடல் பகுதி உள்ளிட்ட எத்தகைய இடத்திலிருந்தும் அணு ஆயுதத்துடன் ஏவுகணையைச் செலுத்தக் கூடிய வல்லமை, ஏவுகணைப் படையின் அதிகரிக்கும் திறன் ஆகியவற்றை வட கொரியா புதிய சோதனைகளில் பறைசாற்றியுள்ளது.

தனது அணு ஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பொருள்கள், தொழில்நுட்பம் போன்றவற்றை வெளிநாடுகளிலிருந்து பெறும் முயற்சிகளில் வட கொரியா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இணையத் தளம் மூலமாகவும் கூட்டு அறிவியல் ஆய்வுகள் மூலமும் அணு ஆயுத தொழில்நுட்பங்களை வட கொரியா நாடி வருகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒலிம்பிக் போட்டியை பயன்படுத்தி ஷி ஜின்பிங் வெளிநாட்டுத் தலைவர்களைச் சந்திக்கிறார்

சீனாவில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப விழாவிற்கு வந்துள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் அந்நாட்டு அதிபர் ஷி ஜின்பிங் கடந்த சனிக்கிழமை சந்தித்தார் என்று ராய்ட்டர்ஸ் செய்தி முகமை தெரிவிக்கிறது.

அமெரிக்காவுடனான உறவு கசப்படைந்து வரும் சூழலில் விளையாட்டு விழாவிற்கு வந்த உலக தலைவர்களை சந்திப்பு மூலம் தமது வெளிநாட்டு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள சீன அரசு முயன்று வருகிறது. சீன அதிபர் கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினை சந்தித்தார். கடந்த சனிக்கிழமை செர்பியா, எகிப்து, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களையும் ஷி ஜின்பிங் சந்தித்துள்ளார்.

தலைநகர் பெய்ஜிங்கில் வெள்ளியன்று நடந்த குளிர்கால ஒலிம்பிக் தொடக்க நிகழ்வில் முப்பதுக்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

அவர்களது நிர்வாகக் குழுவினரை மட்டுமே அனுக்கிவைத்த அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் சீனாவில் நடக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை வெளியுறவு ரீதியாகப் புறக்கணித்தன.



# விரைவில் சர்வதேச அங்கீகாரம் பெறுவோம்;தலிபான் நம்பிக்கை

விரைவில் சர்வதேச அங்கீகாரம் பெறுவோம் என்று ஆப்கனில் ஆட்சி செய்யும் தலிபான் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முட்டாக்கி தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்த அமெரிக்க படைகள் கடந்த ஆண்டு முழுவதுமாக தாயகம் திரும்பின. இதையடுத்து, அங்குநடந்த உள்நாட்டுப் போரில் தலிபான்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றின.

ஆனால் தலிபான்களை அங்கீகரிக்க பல உலக நாடுகள் மறுத்து வருகின்றன. மேலும் உலக வங்கி, சர்வதேச நிதியம் (ஐ.எம்.எவ்), அமெரிக்க பெடரல் ரிசர்வ் ஆகியவை சர்வதேச நிதியைப் பயன்படுத்த ஆப்கனுக்கு தடை விதித்தன.

இதனால் ஆப்கானிஸ்தானில் வேலையின்மை, வறுமை, பசிபட்டினி அபாயகட்டத்தைத் தாண்டிவிட்டது. மேலும் அத்தியாவசிய பொருள்களின் விலையும் கடுமையாக அதிகரித்துள்ளது.

இந்தநிலையில்சர்வதேசஅங்கீகாரத்தை விரைவில் பெற்றுவிடுவோம் என்று வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

ஏஎஃப்பி செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்தபேட்டியில், சர்வதேசஅங்கீகாரத்தை பெறுவதற்கான தருணம் வந்துவிட்டது. சர்வதேச சமூகங்கள் நம்முடன் பேச்சு நடத்தை இப்போது ஆர்வம் காட்டுகின்றன.

இதுவே, ஆப்கனில் ஆளும் தலிபான் அரசை சர்வதேச சமூகம் மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்கிறது என்பதற்கான சான்று. காபூலில் விரைவில் வெளிநாட்டுத் தூதரங்கள் செயல்பாட்டுக்கு வரும். நாம் சில விடயங்களில் கெடுபிடி காட்டுகின்றமை நமது கொள்கை இதைப் புரிந்து கொண்டு அமெரிக்கா போன்ற நாடுகள் நம் நாட்டின் மீதான தடைகளை விரைவில் விலக்க வேண்டும். என்று அவர் கூறினார்.

ஆனால் ஆப்கனில் கடந்த வாரம் கூட போராடிய பெண்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டனர் என சர்வதேச அமைப்புகள் குற்றஞ்சாட்டுகின்றன.

பெண் கல்வி, பெண்ணுரிமையை உறுதி செய்யுமாறு தொடர்ந்து உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்தாபகர் அஷ்ரபின் கனவை நிறைவேற்றுவது தென்கிழக்கு பல்கலை சமூகத்தின் கடப்பாடு

## பட்டமளிப்பு விழாவில் நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் வலியுறுத்து





(நூருல் ஹுதா உமர், சலீம் றமீஸ்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எச்.எம். அஷ்ரப் தென்கிழக்கு பல்கலைக்கழத்தில் சட்டபீடத்தை நிறுவி, அந்தச் சட்டபீடத்தில் தான் விரிவுரையாளராகக் கடமையாற்ற வேண்டும் எனும் கனவை தன்னுள் வைத்திருந்தார். நானும் அவரும் சட்டபீட மாணவர்களாக இருந்தபோது நானும் அவரும் சட்டபீடத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்ற வேண்டும் எனும் கனவை மறைந்த அஷ்ரப் தன்னுள் வைத்திருந்தார். அவரது கனவை நிஜமாக்கும் பொறுப்பு இன்றைய பல்கலைக்கழக சமூகத்திற்கு இருக்கிறது என உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் தலைமையில் நடைபெற்ற தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 14 ஆவது பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது நாளில் கலைப்பீட மாணவர்களுக்கான பட்டமளிக்கும் நிகழ்வில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரை யாற்றிய அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:

தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்றால் மறைந்த அஷ்ரப்பே எல்லோருக்கும் நினைவில் வருவார். அரசியலிலிருந்து ஓய்வுபெற்று சட்டபீட மாணவர்களுக்கு தன்னுடைய சட்டம் சார்ந்த அறிவை வழங்க வேண்டும் எனும் அவா அவரிடம் இருந்தது. அவரது கனவுகள் மிக தூரநோக்கு கொண்டவையாக அமைந்திருந்தன. இந்தப் பல்கலைக்கழகத்தில் சட்டபீடம் மட்டுமின்றி வைத்தியபீடமும் காலத்தின் தேவையாக உள்ளது. கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையை இணைத்துக்கொண்டு மருத்துவ பீடத்தை உருவாக்க முயற்சிகளை எடுக்க வேண்டும்.

எதிர்காலம் ஆங்கிலத்தை மையமாக கொண் டுள்ளதால் எதிர்கால உயர் கல்வி பாடத்திட்டங்கள் ஆங்கில மொழிமூலமே அமையவேண்டும். மலேசியா, சிங்கபூர் போன்ற நாடுகள் இந்தக் கொள்கையை வெகுவாக பின்பற்ற ஆரம்பித்துவிட்டார்கள். நாம் எதிர்கால சந்ததியினரைக் கருத்தில் கொண்டு எமது திட்டங்களில் பாரிய மாற்றங்கள் உருவாக்க வேண்டும். – என்றார்.

இந்நிகழ்வில் பேராசிரியர் எஸ். தில்லைநாதனுக்கு இலக்கியப் பணியை பாராட்டிக் கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. கலைப்பீடத்தை சேர்ந்த 567 மாணவர்களுக்கு இன்றைய அமர்வின் போது பட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் 04 மாணவர்கள் முதுகலைமாணி பட்டம் வழங்கிவைக்கப் பட்டமையுடன் 2013/14 கல்வியாண்டின் சிறந்த மாணவிக்கான கலாநிதி எம்.எல்.ஏ. காதர் விருது அப்துல் வஹாப் பாத்திமா பினாஸிர்க்கும், அதே கல்வியாண்டில் பேராசிரியர் கைலாசபதி விருது செய்யாது இப்ராஹிம் பாத்திமா பஹ்மியாவுக்கும் வழங்கிவைக்கப்பட்டன.

2014/15 கல்வியாண்டின் சிறந்த மாணவிக்கான கலாநிதி எம்.எல்.ஏ. காதர் விருது எஸ்.வை.யூ.பாத்திமா றுமானா மௌலானாவுக்கும் அதே கல்வியாண்டில் பேராசிரியர் கைலாசபதி விருது எம்.எஸ். சுமய்யாவுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.



# உயர்தரப் பரீட்சையின் வினாத்தாள் கால தாமதமாக வழங்கப்பட்டதாம்!

## மாணவர்களும், பெற்றோரும் விசனம்

நேற்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பொதுத்தர உயர்தரப் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு (களுவாஞ்சிகுடி) தேசிய பாடசாலை பரீட்சை நிலையத்தில்நடைபெற்றபரீட்சையின்போது வினாத்தாள் காலதாமதமாக வழங்கப்பட்டது எனத் தெரிவித்து மாணவர்களும், பெற்றோரும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்றையதினம்நடைபெற்ற இணைந்த கணிதபாட பரீட்சையின்போது, வழங்கப்பட்ட வினாத்தாள்களில் முதலாம் பகுதியும், இரண்டாம் பகுதியும், காலை 8.30 மணிக்கே மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவற்றில் இரண்டாம் பகுதி வினாத்தாள் காலை 8.30 மணிக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, மற்றைய முதலாம் பகுதி வினாத்தாள் வழங்கப்பட விலலையே என மாணவர்கள், பரீட்சை மேற் பார்வையாளரிடம் கோரியதற்கிணங்க, அதன் பின்னர் காலை 10 மணியளவில் மற் றைய வினாத்தாள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது எனவும், எனினும் பரீட்சை வினாத்தாள்கள் 11.40 மணிக்கு சரியாக முழுமைக்கப்பட்டன எனவும், மாணவர்களும் பெற்றோரும் விசனம் தெரிவிக்கின்றர்.

பெற்றோர் பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்திற்குச் சென்று தமது பிள்ளைகளுக்கு நடந்த அநீதி தொடர்பில் எழுத்து மூலம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவ்விடயம் அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர், இரா.சாணக்கியன், பட்டிருப்பு வலயக்கல்வி அதிகாரிகளுடனும், பெற்றோர்களுடனும் கலந்துரையாடினார்.

நேற்று நடைபெற்ற பரீட்சையின்போது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட தவறு தொடர்பாக சம்பந்தப்பட்ட பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இரா.சாணக்கியன் வலயக்கல்விப் பணிப்பாளரிடம் தெரிவித்தார்.

எனினும், மாணவர்களுக்கு நடந்த அநீதி தொடர்பில், தாம் கல்வி அமைச்சரை நேரில் சந்தித்து விடயத்தை அவரது கவ னத்திற்குக் கொண்டு செல்வார் எனக் நாடாளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவித்தார்.

# 15 நாள்களாகத் தேடப்பட்டு வந்த நபர் வயல் வெளியிலிருந்து சடலமாக மீட்பு

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புணானை வயல் பகுதியில் நேற்று திங்கட்கிழமை சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர். வயல் பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் படி வாழைச்சேனை பொலிஸார் அங்கு சென்று சடலத்தை மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தியாவட்டவான் - மயிலங்கரைச்சை பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய சீனித்தம்பி யோகராசா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், 15 நாள்களுக்கு முன்னர் வீட்டை விட்டு சென்றார் எனவும், அவரைக் காணவில்லை என உறவினர்கள் தேடி வந்தனர் எனவும், அவரின் மரணத்தில் சந் தேகம் நிலவுவதாகவும் குடும்பத்தினர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

இதையடுத்து வயலில் இருந்து மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கத்திக் குத்தால் இதயப்பெருநாடி கிழிக்கப்பட்டவர் வவுனியா வைத்திய குழுவினரால் காப்பாற்றப்பட்டார்

வவுனியா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை நிபுணர்கள் மற்றும் மருத்துவ குழாமின் அயரா முயற்சியால் கத்திக் குத்துக்கு இலக்காகி இதயப் பெருநாடி கிழிந்த இளைஞர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

01.02.22 அன்று இரவு 8 மணியளவில் ஓமந்தை பால மோட்டை பகுதியில் 32 வயதுடைய இளைஞரொருவர் கத்திக் குத்துக்கு இலக்காகியிருந்தார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உக்கிரமடைந்த நிலையில் இவர் பலமுறை நெஞ்சிலும், வயிற்றிலும் மிக ஆழமாகக் குத்தப்பட்டிருந்தார்.

அதீத இரத்த போக்கால் மயக்கமுற்ற நிலையிலும் குடல் வெளித்தள்ளிய நிலையிலும் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு இரவு 9.15 மணியளவில் சேர்க்கப்பட்டார்.

வயிற்றினுள் தொடர்ந்த குருதிப்பெருக்கினாலும் சுவாசப்பை மற்றும் சுவாசக் குழாய்கள் கிழிந்தமையால் Lung and tracheo bronchial injury ஏற்பட்ட நெஞ்சறைக் காற்று கசிவினாலும் மிகவும் ஆபத்தான நிலையிலிருந்த இவரின் உயிரை அவசர சிகிச்சை குழாமினர் கடும் முயற்சியால் தக்க வைத்துக்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் சத்திரசிகிச்சை குழுவினரால் இருபக்க நெஞ்சினுள்ளும் துளையிடப்பட்டு குழாய்கள் அனுப்பப்பட்டு நுரையீரலைச் செயலிழக்கச் செய்த காற்று வெளியேற்றப்பட்டு சத்திர சிகிச்சை கூடத்துக்கு அனுப்பப்பட்டார்.

வைத்தியர் யோகானந்த் தலைமையிலான மயக்க மருந்து வைத்திய குழாமினர் கடும் போராட்டத்துக்கு மத்தியில் உயிரைப் பிடித்துக் கொண்டிருக்கச் சத்திர சிகிச்சை நிபுணர்களான வைத்தியர் வரணிதரன் மற்றும் வைத்தியர் ஜயந்தன் இருவரும் இணைந்து அறுவை சிகிச்சையை மேற்கொண்டனர்.

இரத்தக் குளமாக இருந்த வயிற்றறையை ஆராய்ந்தபோது மேல் வயிற்றில் பாய்ந்த கத்தி இரைப்பையைத் துளைத்துச்சென்று கணையச் சுரப்பியை கிழித்துக்கொண்டு மண்ணீரல் நாடியையும் இதயப் பெருநாடியையும் கிழித்திருந்த நிலையில் இரத்தம் பீறிட்டு பாய்ந்து கொண்டிருந்தது.

விரைந்து செயற்பட்ட சத்திர சிகிச்சை நிபுணர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் நுணுக்கமான முறையில் இரத்த நாடிகளைச் சரிசெய்து குருதிப் பெருக்கை கட்டுப்படுத்தினர்.

இதன்பின்னர், குடலிலும் இரைப்பையிலும் ஏற்படுத்தப்பட்டிருந்த 5 துளைகளும் சரிசெய்யப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுதற்போது அவர் தேறி வருகிறார்.

இவ்வாறு, இதயப் பெருநாடி கிழிந்தவர்களைக் காப்பாற்றுவது அரிதிலும் அரிது. இவ்விடயத்தில், இணைந்து பணியாற்றிய வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களதும், குறிப்பாக அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைப் பிரிவு, இரத்த வங்கி, சத்திர சிகிச்சை கூட மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஊழியர்கள் மயக்க மருந்து வைத்தியர்களது உழைப்பு மெச்சுதலுக்குரியது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.





# 35 லீற்றர் கசிப்புடன் ஒருவர் வட்டு.காட்டுப்புலத்தில் கைது!

வட்டுக்கோட்டை - சுழிபுரம் காட்டுப்புலம் பகுதியில் கசிப்பு காய்ச்சிக் கொண்டிருந்த 32 வயதுடைய நபர் ஒருவர் 35 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வட்டுக்கோட்டை பொலிஸாரும் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வீட்டுக்குப் பின்னால் உள்ள கோழிக்கூட்டுக்குள் இவ்வாறு கசிப்பு காய்ச்சும் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆளும் கட்சிக் கூட்டத்தில் கம்மன்பில மீது விமர்சனம்!

ஆளும் கட்சி கூட்டத்தில் அமைச்சர் உதய கம்மன்பில மீது கடுமையான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. அலரி மாளிகையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஆளும் கட்சி கூட்டத்தில் இவ்வாறு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவை பலரும் விமர்சனம் செய்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கொவிட் மட்டும் காரணமில்லை என அமைச்சர் உதய கம்மன்பில கூறிய கருத்துக்கு, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, ஜகத் குமார, திஸ்ஸ குட்டியாரச்சி உள்ளிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் பலரும் உதய கம்மன்பிலவின் செயற்பாடுகளை விமர்சனம் செய்துள்ளனர்.

நாடு தொடர்ச்சியாக கடன் பெற்றுக்கொண்டதால் இவ்வாறு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என்பதை வெளிப்படுத்த தாம் முயற்சித்தார் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எனினும் அமைச்சரின் இந்த செயற்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டுமென சில ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

# சுவிற்ஸர்லாந்தில் கோர விபத்து யாழ். இளைஞன் பரிதாபமாக பலி!

சுவிஸர்லாந்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ்.இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. உயிரிழந்த இளைஞர் யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த 31 வயதானவர் எனவும் கூறப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை வாகன விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில், குறித்த இளைஞரை மீட்ட பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபாக கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# வவுனியாவில் பட்டப்பகலில் வீடுடைத்து நகை மற்றும் பணம் துணிகரத் திருட்டு!





வவுனியாவில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகை மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ள நிலையில் மோப்ப நாயின் துணையுடன் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) மதியம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா பண்டாரிக்குளம் மாடசாமி கோவில் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வசித்து வந்தவர்கள் உறவினர் ஒருவரின் பூப்புப்புனித நீராட்டு விழாவிற்கு காலை சென்றிருந்தனர். அயல் வீட்டாரும் உறவினர் வீட்டுக்கு சென்றிருந்தமையால் கடந்த சில நாள்களாக வீட்டில் இருக்கவில்லை.

இதனையறிந்த திருடர்கள் பட்டப்பகலில் மதில் ஊடாகக் குறித்த வீட்டிற்குள் நுழைந்து, படி மூலம் வீட்டின் மேற் கூரைப்பகுதிக்கு சென்று சமையலறை ஓட்டை கழற்றி அதனூடாக உட்கூரைப் பகுதியை உடைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்துள்ளார்கள்.

நுழைந்தவர்கள் வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நகை பணம் என்பவற்றை சல்லடை போட்டு தேடியுள்ளதுடன், வீட்டில் இருந்த நான்கு பவுண் நகை மற்றும் 5 ஆயிரம் ரூபா பணத்தையும் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பூப்புப்புனித நீராட்டு விழாவிற்கு சென்ற வீட்டார் வீட்டை திறந்த போது அங்கு பொருள்கள் பரவிக் கிடந்ததுடன், சமையலறை கூரை உடைக்கப்பட்டும், கதவு திறக்கப்பட்டும் இருந்ததை அவதானித்ததுடன் நகை மற்றும் பணம் திருடப்பட்டு இருந்தமையையும் அவதானித்துள்ளனர். இதனையடுத்து பண்டாரிக்குளம் பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து அவர்கள் ஊடாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.ஏ.ஏ.எஸ்.ஜயக்கொடி தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மற்றும் தடயவியல் பொலிஸார் வருகை தந்து மோப்ப நாயின் உதவியுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.02.2022இல் வெளியிடப்பெற்றது.